[1987 மார்ச் 25

திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்கள் அறைகளில் டெலிபோன் இணைப்பை துண்டித்திருக்கின்றார்கள். கடந்த மாதம் 6 ஆம் தேதியில் இருந்து 9 ஆம் தேதிவரையில் எங்களுடைய அறைகளிலே இருக்கும் டெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அதற்கு காரணம் கேட்கிறபோது, தமிழக அரசு பணம் கட்டாததனால் இப்படி இணைப்பு துண்டிக்கப்பட்டதாக சொன்னார்கள். ஆகவே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பணம் கட்டி விட்டிருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினை அலுவலகம் சம்பந்தப்பட்டது. அதுபற்றி தெரிந்துகொண்டு மீண்டும் இங்கே பேசுவது முறையல்ல.

திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆம் தேதியிலிருந்து 9 ஆம் தேதி வரை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறைக்கு வந்தால் அங்கே பேசலாம்.

3. கவன ஈர்ப்பு.

(அ) விவசாயிகளுக்கு வெடிமருந்துப் பொருள்கள் கிடைப்பதில் தடங்கல்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் வெடி மருந்து, வெடி மருந்து பொருட்கள் (கிணறு தோண்டப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள்) விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளதால், தற்போதுள்ள வறட்சியின் காரணமாக விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்த முடியாத நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாட்டில் சென்னை மாநகர் மற்றும் பல்வேறு பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட வெடி குண்டு வெடிப்புகளினால் ஏற்பட்ட நிலைமையினை கட்டுப்படுத்தும்பொருட்டு வெடிபொருட்கள் கொண்டு செல்லுதல், விநியோகம் செய்தல், மற்றும் சேர்த்து வைத்தல் ஆகியவைகள் அரசால் தற்காலிகமாக தடை செய்யப்பட்டது. அவ்வப்போது நிலைமையினை கவனமாக பரிசீலனை செய்த பின்னர், வெடிபொருட்கள் விநியோகம் செய்வதை தடை செய்து விதிக்கப்பட்ட ஆணையினை அரசு 16—2—1987 அன்று ரத்து செய்து விட்டது. இதற்கான ஆணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது. வெடிபொருட்கள் விநியோகம் செய்ய விதிக்கப்பட்ட தடை ஆணை ரத்து செய்யப் பட்டு விட்டதால், கிணறுகளை ஆழப்படுத்த வெடி மருந்து பொருட்கள் கிடைக்காத நிலை தற்போது இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த தடை ஆணை நீக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இப்போது விவசாயிகள் இப்படிப்பட்ட வெடி மருந்துகள் பெற மாவட்ட அளவிலே இருக்கின்ற மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்களிடம் தான் அதற்கான அனுமதி பெறவேண்டியதாக இருக்கின்றது. இது உண்மையிலேயே விவசாயிகளுக்கு கால நேரத்தை வீணாக்குகிற வகையிலும், செலவுகளை அதிகரிக்கின்ற வகையிலும் இருக்கின்றது. ஆகவே வட்ட ஆட்சியாளர்களிடமே அதற்கான அனுமதி பெற, அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே நாட்டிலே ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் காரணமாகத்தான் இடையிலே தடை விதிக்கப்பட்டது. இப்போது வருவாய் துறை அதிகாரி என்ற அளவுக்கு வைத்திருப்பதிலே இருக்கின்ற கஷ்டங் களை மற்றவைகளை ஆராய்ந்து பார்த்து அதை வட்ட ஆட்சி யாளர் அவர்களுக்கு மாற்றுவதன் மூலம் கேடு ஏதும் ஏற்படாது என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்கள் கருத்தை பரிசீலிக் கலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதை வட்ட ஆட்சியாளர் அளவிலே கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் அதற்கு நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல இருக்கின்ற விதி களில் வெடி மருந்துகள் கொடுக்கின்றபோதுகூட ஒரு சமயத்தில் 5 கிலோதான் கொடுக்கமுடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு 5 கிலோவுக்கும் அனுமதி பெறுவது என்ற நிலைமை இருப்பதால் அது மேலும் விவசாயிகளுக்கு துன்பத்தை விளைவிக்கின்றது. எனவே கொடுக்கின்றபோது, தெளிவாக அந்த பகுதியிலே கிணறு வெட்டுகின்ற இடத்திலே சென்று இன்ஸ்பெக்ஷன் செய்து, அந்த கிணற்றுக்கு எவ்வளவு தேவை என்று தெரிகின்றதோ அதில் மூன்றில் ஒரு பங்கு அல்லது பாதி பங்கு அளவுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் சிரமம் குறையக்கூடிய நிலைமைகள் இருக்கும். எனவே அந்த 5 கிலோ என்ற அளவை உயர்த்தி கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களிலே வைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் இருந்து எடுக்கப்பட்டிருக் கின்ற வகையில்—இன்றைக்கு காலையிலே பத்திரிகையிலேகூட வந்திருக்கின்றது—19 பீப்பாய்களிலிருந்து வெடி மருந்துகள்

1987 மார்ச் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எடுக்கப்பட்டன என்றெல்லாம் செய்தி வருகின்றது. அந்த செய்தி வருகின்றபோது, கொடுக்கப்பட்டிருக்கின்ற மருந்துகளை எந்த நோக்கத்திற்காகக் கொடுத்தோமோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் நல்லது. வருவாய் கருதி, பணம் கருதி அதை விற்றுவிடுகின்ற சூழ்நிலையில், அதை வாங்குகின்றவர்கள் அநியாயத்திற்குப் பயன்படுத்துகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே மிகவும் எச்சரிக்கையாகவும், கடுமையான விதிமுறைகள் அடிப்படையிலே பயன்படுத்த வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கும் நாம் ஆளாக்கப் பட்டிருக்கிறோம். ஆகவேதான் இப்பொழுது, இருந்த தடை ஓரளவு நீக்கப்பட்டு, விவசாயிகளுக்கு இருக்கிற கஷ்டங்கள் போக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தடை நீக்கப் பட்டிருக்கிறது. மருந்துகளை வழங்குகின்ற முயற்சியும் எடுக்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் விதிகளை எந்தெந்த அளவுக்கு தளர்த்தலாம் என்பதையும், முறைப்படுத்தலாம் என்பதையும் அனுபவத்தின் அடிப்படையில் நாட்கள் செல்ல செல்ல நாம் முறைப்படுத்தி மேற்கொள்ளலாம்.

(ஆ) கோவில்பட்டி வட்டம், பாண்டவர் மங்கலம் கிராமத்தில் வீட்டு மனைப் பட்டா வழங்குவது குறித்து.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வ. உ. சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி தாலுகா பாண்டவர் மங்கலம் கிராமத்தில் சர்வே எண் 553/1 ஏ-யில் உள்ள நத்தம் புறம்போக்கை, நிலமில்லாத 46 பெயர் குறிப்பிடப் பட்ட ஏழைகளுக்கு வீட்டு மனைக்காகப் பட்டா வழங்க மாவட்ட வருவாய் அதிகாரி ஆணை பிறப்பித்து ஓராண்டாகிய பின்னரும், இதுவரை கோவில்பட்டி வட்ட ஆட்சியர் பட்டா வழங்காமல் காலந்தாழ்த்துவதால் அந்த ஏழைகள் அடைந்துள்ள அளப்பரிய கவலைக் குறித்தும் காலதாமதத்தால் உருவாகும் புது சூழ்நிலை காரணமாக ஏற்படும் அசாதாரண நிலைக் குறித்தும்" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.